தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 பிப்ரவரி 24

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஆர். எஸ். மங்கலம் ஆயக்கட்டு பகுதிகளில் வரி வசூல்

*வினா எண் 122— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ல் முகவை மாவட்டம் ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்கு வைகை தண்ணீர் விட்டதற்காக ஏக்கர் ஒன்றுக்கு தண்ணீர் வரி ரூ. 5 வீதம் போடப்பட்டு பாதிக்கு மேல் வசூல் செய்யப்பட்டதா—

(ஆ) தண்ணீர் விட்டது உண்மையா ?

(இ) வசூலிக்கப்பட்ட மொத்த அபிவிருத்தி வரி எவ்வளவு?

(ஈ) தற்போது வசூல் எவ்வளவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) கேட்புத் தொகை ரூபாய் 55,493·77-ல் ரூபாய் 7,541·87 வசூலிக்கப்பட்டது. பிறகு, 9—9—77 அன்று முகவை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த அறிவுரைக்கிணங்க வசூலிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

(இ) அபிவிருத்தி வரி அல்லது மேம்பாட்டு வரி (Betterment levy) வசூலிக்கப்படவில்லை.

(ஈ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் ஆர். எஸ். மங்கலம் பகுதி மிகவும் வறட்சியான பகுதி, அந்தக் பகுதியில் கடந்த மூன்று ஆண்களாக பஞ்

சம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு ரெமிஷன் தரவேண்டும் என்று கேட்டு, பல வருடங்களாக கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஆர். எஸ். மங்கலம் ஏரிக்கு தண்ணீர் விட்டதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூல் செய்வது வெந்த புண்ணில் வேல் கொண்டு பாய்ச்சுவது போல் இருக்கிறது. விவசாய மக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்று வசூலிப்பது மிகவும் பாதகமானது.

அது மட்டுமல்ல. இந்த ஆர். எஸ். மங்கலம் ஏரியிலிருந்து 7,000 ஏக்கர்களுக்கு தண் ணீர் பாய வேண்டும், சுமார் 15 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பெரிய ஏரி, இப்படிப்பட்ட ஏரி இப்போது சரியானபடி பராமரிக்கப்பட்டு வராமல் இருப்பதால் இந்த ஏரியிலிருந்து நல்ல முறையில் விவசாயிகள் தண்ணீர் பெற முடியவில்லை. இப்படிப் பட்ட நிலையில் விவசாயிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூலிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஏரியிலிருந்து விவசாயிகளுக்கு தண் ணீர் வராததற்கு காரணம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: தண்ணீர் வராததற்குக் காரணம் இந்த ஏரியில் போடப்பட்டிருக்கிற 'ஃபாலிங் ஷட்டர்ஸ்' சரியாக வேலை செய்யாமல் இருப்பதால் தண்ணீர் எல்லாம் வெளியே போய்விடுகின்றது. இப்படிப்பட்ட நிலையில் தண்ணீர் கொடுத்ததற்காக விவசாயிகளிடம் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வரி வசூலிப்பது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வைகை ஆற்று சீரமைப்புத் திட்டத்தின் கீழ் எந்தெந்த பகுதிகளில் எல்லாம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறதோ அந்தப் பகுதிகளில் உள்ள ஆயக்கட்டுகளில் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வரி என்று போடப்பட்டிருக்கிறது. முதலில் போடப்பட்ட இந்தத் திட்டம் 1977-க்குள் இந்த வேலை முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த முறையில் ஆர். எஸ். மங்கலம் ஏரியிலுள்ள ஆயக்கட்டுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வசூலிப்பது என்று ஆரம்பித்து வசூலிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு முன்பு போடப்பட்ட திட்டம் பூராவும் நிறைவேறாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆர். எஸ். மங்கலம் பகுதியில் உள்ள ஆயக்கட்டுக்காரர்களிடமிருந்து வசூல் செய்து வந்தது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 24]

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, ஐந்து ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு வசூலிப்பது என்று அரசாங்கம் ஆர்டர் போட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். தற்காலிகமாக இல்லாது பஞ்சப் பகுதியாக இருக்கின்ற பகுதிகளில் நிரந்தரமாக இப்படிப்பட்ட தீர்வை வசூலிப்பதை நிறுத்தி வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருடம் எல்லாம் பஞ்சம் வரக்கூடாது என்பதற்காகத்தான் வைகை சீரமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வேலை முடிந்ததும், ஆர். எஸ். மங்கலம் ஏரிக்குத்தேவையான தண்ணீரை விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும். மேலும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் விடுவதாக இருந்தால்தான் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படும். இயற்கையின் கோளாறு காரணமாக தண்ணீரை பயன்படுத்த முடியவில்லை என்றோ தண்ணீர் கிடைக்கவில்லை என்றோ அல்லது தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றோ இருக்குமானால் அந்தப் பகுதிகளில் தண்ணீர் தீர்வை வசூல் செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் தண்ணீர் கிடைக்கவில்லை அல்லது தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்றோ வருகின்ற இடங்களில் தண்ணீர் தீர்வை வசூலிக்கப்படுகிறது என்ற நிலை எங்காவது இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அதை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இப்படி பஞ்சப் பிரதேசத்திலே வசூல் செய்யப்பட்ட ரூபாய், மீண்டும் விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுமா? இந்தக் கண்மாயை ரிப்பேர் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாய் நல்ல முறையிலே ரிப்பேர் செய்யப்படும். ஆனால் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை அரசு எடுத்துக் கொள்ளாது. முன்னால் இருந்த அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில், இன்னும் சில சீர்திருத்த வேலைகள் செய்வதற்காக வசூல் செய்தது. அதற்குப் பின்னால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாததால், திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்தது. எனவே, விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகின்ற பணம் அவர்கள் கணக்கில் அரசு வைத்து, அவர்களுக்காகவே பயன்படுத்தும். இல்லாவிட்டால், அந்தப் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

திரு. ஒ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1976—77ஆம் ஆண்டில் இது நடந்தது. 1976—77-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் வெள்ளாமை வராத காரணத்தால், வரியைத் தள்ளுபடி செய்கின்ற நேரத்தில், தண்ணீர் வரி வசூல் செய்திருக்கிறார்கள். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு அரசுமுன்வருமா? அடுத்து, வைகை மேம்பாட்டுத் திட்டத்தினால், தண்ணீர் பாய்ச்சப்பட்டது என்று சொல்லுகிறார்கள் அமைச்சர் அவர்கள். ஆனால், புதிதாக சேர்க்கப்பட்ட 40,000 சொச்சம் ஏக்கரில் ஆர்.எஸ். மங்கலம் கண்மாய் பகுதியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ். மங்கலம் ஏரிப் பகுதி ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டதன் காரணமாகத்தான் ஐந்து ரூபாய் அதனுடைய ஆயக்கட்டு நிலங்களுக்கு விதிக்கப்பட்டது. ஆனால் நான் முதலிலே தெரிவித்தபடி மேம்பாட்டுத் திட்டம் முடிவடையாத காரணத்தால், ஆர்.எஸ். மங்கலம் கண்மாயில் தேவையான தண்ணீர் வராத காரணத்தால், இந்த ஆயக்கட்டிலே தண்ணீர் பாய்ச்சாத காரணத்தால், வசூலிக்கப்பட்டது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் வசூல் செய்ய வேண்டியது ரூ. 50,000 சொச்சம். வசூல் செய்தது ரூ. 7,000 சொச்சம். அந்த வசூல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் அரசிடம் அவர்கள் கணக்கிலே இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புறம்போக்கு நில ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

*வினா எண். 123.—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது ?

(ஆ) இம்முறைகளை மாற்றி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?